# இராம கோபாலன்

*நிறுவன அமைப்பாளர்*

**இந்து முன்னணி,** தமிழ்நாடு
59, அய்யா முதலித் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.
தொலைபேசி : 044-28457676


10-2-2012

## இந்து முன்னணி நிறுவன அமைப்பாளர்
## இராம கோபாலன் அவர்களின் பத்திரிகை அறிக்கை!

### காதலர் தினம் : பண்பாட்டுச் சீரழிவைத் தடுப்போம்..

ஸம்ஸ்க்ருதத்தில் ஒரு பாடல் உண்டு. அது ''..**எதுவும் தப்பில்லை**, விபச்சாரமோ, பண்பாடற்ற வாழ்வோ.. என்பன எல்லாம் தப்பில்லை யாருக்கு என்றால் அறம் சார்ந்த நல்லதொரு வாழ்வை வாழாதவர்களுக்கு எதுவும் தப்பில்லை'' என்று பொருள்.

இன்று நமது நாட்டைக் குறிவைத்து பல தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன. சில நேரிடையாக வந்து தாக்குகின்றன, சில கொல்லைப்புறமாக வருகின்றன. மறைமுகமாக வருகின்றன.. அவை நமது பண்பாட்டை, கலாச்சாரத்தைக் கெடுக்கும் நச்சுப் பிரச்சாரங்கள். அப்படிப்பட்ட ஒன்று தான் காதலர் தினம். இதன் நோக்கம் கலாச்சாரத்தைச் சீரழிப்பது, சந்தையை வளர்ப்பது. எப்பிட அட்சயதிருதியைக்கு தங்கம் வாங்குங்கள் என்று விளம்பரப்படுத்தப்பட்டு மக்களை மயக்குகிறார்களோ! அதுபோல காதலர் தினத்திலும் விளம்பர உத்தி மூலம் பொருள்கள் வாங்க விளம்பரப்படுத்துகிறார்கள். இதனால் நிறைவது இவர்களது கஜானா! ஆனால் அதற்கு விலையாவது நமது மக்களின் பண்பாடு!

ஜெர்மனியின் சர்வாதிகாரி ஹிட்லர் பிரான்ஸின் மீது படையெடுத்த போது, 'பிரான்ஸை சுலபமாகப் பிடித்து விடலாம், காரணம் அங்கு ஆண்மை உடையோர் இல்லை, எல்லா இளைஞர்களும் குடியும், கூத்தாட்டமுமாக வாழ்பவர்கள்.. எனவே அந்நாட்டைத் தோற்கடிப்பது நமக்கு எளிதானது..' என்றான்.

ஹிட்லர் சொன்னது போலவே பிரான்ஸ் தோற்று ஜெர்மனியின் கொடியை அந்நாட்டில் ஏற்றும்போது அங்கிருந்த ஒரு பெண் மண்ணில் வீழ்ந்து அழுவதை அப்போது பிரபல பத்திரிகைகளில் போட்டோவுடன் வெளியிட்டிருந்தார்கள். நாட்டைக் காக்க ஓர் ஆண்மகனும் இங்கு இல்லாமல் போய்விட்டானே! என்ன வெட்கக்கேடான நிலை பிரான்ஸ்க்கு! என்று கதறி அழும் காட்சி நெஞ்சை உலுக்குவதாக இருந்தது.

இன்று நமது நாட்டை அதுபோல சீரழிக்க, பண்பாட்டை அழிக்க, ஒழுக்கத்தோடும் தேச பக்தியோடும் வாழும் தலைமுறையைத் திசை திருப்ப இதுபோன்ற விஷ வித்துக்கள் தூவப்படுகின்றன.

இதனால் என்ன ஏற்படும்..? தாய், தந்தை தெரியாத குழந்தைகள் பெருகும், ஆதரவற்றோர், முதியோர் இல்லங்கள் எங்கும் முளைத்தெழும், அங்கஹீனம், மனநலம் பாதிக்கப்பட்டோர் வாழ வழியின்றி தெருவெங்கும் திரிவர்.. இதுவே தேசியப் பிரச்னையாகும்.. குடும்பங்கள் சிதையும்; சுயநலவாதிகளின் ஆட்டத்தால் சமூகவிரோதிகள் பெருகுவர், மக்கள் எடுப்பார் கைப்பிள்ளையாகி, நாடு சூறையாடப்படும்.. குடியும் கூத்தாட்டமும் தேசத்தின் அடையாளமாகும்..

இதற்காகவே இந்தக் கொண்டாட்டங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. தேச பக்தி உள்ள ஒவ்வொருவரும் இதனை எதிர்க்க வேண்டும். நமது பண்பாடு, நமது உரிமை! நமது குடும்பம், நமது பாதுகாப்பு! நமது நாடு நம்முடைய அடையாளம்.. இதற்குப் பங்கம் ஏற்பட அனுமதியோம் என்று சூளுரைப்போம்..

ஒவ்வொரு நாட்டிற்கும் ஓர் அடையாளம் உண்டு. ஆன்மீகம் தான் நமது நாட்டின் அடையாளம். அறம், பொருள், இன்பம், வீடு எனும் உறுதிப்பொருளைக் கொண்டு, வீடுபேற்றை அடைவது தேசத்தின் குறிக்கோள், லட்சியம், நோக்கம்.

மனிதன் மனித நிலையிலும், மனித நிலையைத் தாண்டி தெய்வ நிலைக்கு உயர்த்திக்கொள்வதற்கும் உறுதுணையாக அமைந்துள்ளது நமது வழிபாட்டு முறைகளே.

வெளிநாட்டுக்காரர்களின் தன்மை பொருளை ஈட்டுவது, சுகமாக வாழ்வது என்பது. 'பொருள் முதல் வாதம்' அல்லது 'காசே கடவுள் – காமமே வாழ்க்கை' என்பது நமது நாட்டிற்கு ஏற்புடையது அல்ல.

இவையெல்லாம் 'தனிமனித சுதந்திரம்' என்ற வாதம் பித்தலாட்டமானது. இதை அனுமதித்தால் தேசத்தின் அடையாளம் அழிந்து போகும். இந்த விஷ வித்தை அலட்சியப்படுத்தினால் அது வளர்ந்து, பல கிளைகளைப் பரப்பி நாசம் செய்துவிடும்.

மேல்மருவத்தூர் அடிகளார், ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் மகராஜ், தவத்திரு ஜக்கி வாசுதேவ் (ஈஷா யோகா மையம்) சின்மயமா மிஷன், ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், ஸ்ரீ அமிர்தானந்த மயி ஆசிரமம், ஸ்ரீ காஞ்சி சுவாமிகள், வேலூர் சக்தி அம்மா, சுவாமி தயானந்த ஸரஸ்வதி, மடாதிபதிகள், ஆதீன கர்த்தர்கள் போன்ற மகான்கள் இந்தக் கலாச்சார சீரழிவு நோயைத் தடுத்து நிறுத்த மக்களிடையே விழிப்புணர்வை எற்படுத்த முன் வர வேண்டும். இது காலத்தின் அவசியமும், அவசரமும் ஆகும் என்று இந்து முன்னணி கேட்டுக்கொள்கிறது.

என்றும் தேசியப் பணியில்

**இராம கோபாலன்**

நிறுவன அமைப்பாளர்

**இந்த அறிக்கையைத் தங்கள் பத்திரிகையின் அனைத்து பதிப்புகளிலும் வெளியிட வேண்டுகிறோம்.**